புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# திவ்வியப் பிரபந்த யாப்பு கட்டமைப்பில் வகையுளி

மு. துர்கா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூ ர்.

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கியத்தை குறிப்பிட்ட வரன்முறையில் கட்டமைப்பது யாப்பாகும். அவ்வாறு இலக்கியத்தைக் கட்டமைக்க பல உறுப்புகள் பயன்படுத்தப்படுகிறது. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, விகற்பம் என்ற முதன்மை உறுப்புகளை அடிப்படையாக கொண்டு செய்யுள் புனைப்படுகிறது என்பது பொதுவான விதியாகும். ஆயின் பிற்காலத்தில் பிணை, வகையுளி, தெங்கல், கலை, குழிப்பு, வண்ணம் போன்ற பிற துணை உறுப்புகளையும் அடிப்படையாக கொண்டு செய்யுள்களைக் குறிப்பிட்ட வரன்முறையில் கட்டமைத்துள்ளனர். இந்த துணை உறுப்புகள் கி.பி.ஏழாம் நூற்றண்டுக்கு பிறகே மிகுந்த செல்வாக்கு கொண்டுள்ளன. இந்த துணை உறுப்புகள் பா, பாவினங்களுக்கு தேவையான அசை, சீர்களை கட்டமைக்க மிக முக்கியமான ஒன்றாக உள்ளன. சங்க காலத்தில் இந்த வகையான உறுப்புகள் உண்டு. ஆயின் பக்தி இலக்கிய காலத்தில் இசைப்பாக்கள் மிகுந்து பல்கி பெருகினா. அந்த இசைப்பாக்களை வகுப்பத்தில் பிணை, வகையுளி முக்கிய பங்கினை வகிக்கிறது. பிணை, வகையுளி என்ற உறுப்புகள் இல்லை என்றால் இசைப்பாக்கங்களுக்குரிய இலக்கண விதிகள் இல்லாமல் போய்விடும். தொடர்களை கட்டமைக்க பிணை முக்கிய உறுப்பாக உள்ளது. செய்யுளின் ஓசைகளை நிறைவு செய்ய பிணை, வகையுளி முக்கியமான துணை உறுப்பாக உள்ளது. இசைப்பாக்கள் நிறைந்த திவ்வியப் பிரபந்த யாப்பில் வகையுளின் சிறப்பினை ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாக உள்ளது.

முன்னுரை

பாக்களின் ஓசைக்கு ஏற்ப சொற்களின் எழுத்துக்களை அறுத்து முன்னும் பின்னுமாக சேர்ப்பது வகையுளி எனப்படும். சீர், தளை கருத்தி இந்த வகையுளியானது அமைந்துள்ளது. வகையுளியை செய்யுளின் அக உறுப்பு எனலாம். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறும் முதன்மை உறுப்பு எனலாம். ஆயின் அசையும், சீரும் இயைப்புபட அமைப்பது வகையுளியாகும். வகையுளி என்ற ஒரு நெகிழ்ச்சி யாப்பில் இல்லை என்றால் சீர், தளை பிறழந்துவிடும். கூன், விகாரம், வகையுளிபிணை , ஆகியவை துணை உறுப்பில் முதன்மையான உறுப்பாக வகையுளி கூறலாம். இவ்வாறு துணை உறுப்பில் முதன்மை உறுப்பாக உள்ள வகையுளின் சிறப்பினை திவ்வியப் பிரபந்த யாப்பு கட்டமைப்பில் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வகையுளி குறித்த இலக்கணம்

செய்யுளின் ஓசைக்கு ஏற்ப சொற்களை பிரித்து முன்னும் பின்னுமாக பொருளற்ற சூழலில் அமைவது வகையுளியாகும். இதற்கு தொல்காப்பியர் ஒரு நூற்பா வகுத்துள்ளார்.

அசையுஞ் சீரும் இசையோடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தல் வல்லோர் ஆறே[1]

அசையும் சீரும் இசையோடு வல்லோர் நெறி வகுத்துள்ளனர். இவை வகையுளியை குறிப்பதாக இளம்பூரணர் வரையறைச் செய்துள்ளார். ஆயின் நச்சினார்கினியர், பேராசிரியர் போன்றோர் வகையுளி என்று கூறமால் எடுத்துக்காட்டு செய்யுளில் சொற்களின் அசைகளை அறுத்து

*பொருளற்ற சூழலில் ஓசைக்கு ஏற்ப சேர்த்துள்ள முறையினை மட்டுமே விளக்கியுள்ளனர். ஆயின் யாப்பருங்கலக் காரிகை நூல் ஆசிரியர் வகையுளியை ஒழிபியலில் கூறியுள்ளார். இவர் காலம் பத்தாம் நூற்றாண்டாகும். இதை அடி ஒற்றியே இளம்பூரணர் வகையுளி என்ற சொல்லாடலைப் பயன்படுத்துயுள்ளார். இவர் காலம் பதினொராம் நூற்றாண்டு. ஆயின் பின்ன வந்த பேராசிரியர் (12 நூற்றாண்டு), நச்சினார்க்கினியர் (14 நூற்றாண்டு) வகையுளி என்ற பொருண்மையில் பயன்படுத்தப்படவில்லை. 'இதனை வகையுளி என வேறோருறுப்பாக்குவாருமுளர்' என நாச்சினார்க்கினியர் கூறியுள்ளார். ஆயின் இதனை அவர் வகையுளி என்ற கோட்டப்பாட்டில் அடக்கவில்லை. பாக்களின் ஓசைக்கு ஏற்ப அசையும் சீரும் அறுத்து சேர்த்தல் என்ற ஒன்றனை மட்டுமே கூறுகிறார். ' 'நீடு கொடி' என்பதை மாவருவாய் என்றுஅசையுஞ்சீரும் இசையிற் சேர்த்துக வென்பாருமுளர் இவற்றைப் பிற நூலார் வகையுளி யென்ப'[2] என பேராசிரியரும் இதனை வகையுளியாக ஏற்கவில்லை. இருப்பினும் இளம்பூரணர் கருத்து ஏற்புடையதாக உள்ளது. எந்த பாவகை, பாவினங்களும் தமக்குரிய ஓசையில் அமைய வகையுளியே யாப்பின் உள் உறுப்பாக அமைகிறது. இதனை இலக்கிய சான்றுகள் வழி கீழ்வருமாறு அறியலாம்.*

*இசை என்ற சொல் ஓசை குறித்த பொருண்மையில் உரை வகுத்துள்ளனர் மூவரும். இசை, ஓசை என்ற இரண்டு சொல்லும் ஒரே பொருள் குறித்த சொல்லாக தொல்காப்பியம் பயன்படுத்தியுள்ளார்.*

*செய்யுளில் வகையுளி பயன்பாடு*

*வகையுளி சீர், அசை நோக்கி சொற்களை அறுத்து முன்னும் பின்னுமாக சேர்ப்பது. பாவகை, பாவினம் என்ற எந்த செய்யுள் வகையிலும் வகையுளி ஓசை, வாய்பாடு நோக்கியே அமைந்துள்ளது. செய்யுளில் வகையுளி அமையவில்லை என்றால் அது சிறப்பான ஒன்று என்றும். வகையுளி அமையுமானல் சிறப்பில்லா செய்யுள் என வகைமை செய்துள்ளனர்.*

*வகையுளி அமையுமானல் சொற்களின் எழுத்துக்கள் பொருள்ளற்ற சூழலில் அறுத்து சேர்ப்பதால் பாடலின் சொல்நயம் இனிமையின்றி காணப்படுகிறது.*

*வகையுளி இசையினை நோக்கி அன்றி வாய்பாடு நோக்கியே திவ்வியப் பிரபந்தத்தில் பயின்று வந்துள்ளது. சொற்கள் கோவையாக இருக்கும்போது மட்டுமே பாடலின் இசையானது சீராக இருக்கும். அவ்வாறு அன்றி சொற்களை அறுக்கும்போது அதன் சொற்கோவையானது அறுத்து ஒருவித இனிமையின்றே அமையும். எனவே திவ்வியப் பிரபந்தத்தில் பயின்று வந்துள்ள இசைப்பாக்கள் என்று அழைக்கப்படும் பாவினங்கள் அனைத்தும் வாய்பாடு நோக்கி அமைய வகையுளி தேவையான அக உறுப்பாக இருக்கிறது. சங்க கால பாக்கள் பொருண்மை நோக்கி அமைந்த ஒன்றாகும். ஆயின் பா, பாவினங்கள் வடிவம், பொருண்மை நோக்கியே பக்தி இலக்கிய காலத்தில் அமைந்துள்ளன.*

*திவ்வியப் பிரபந்தத்தில் பயின்று வந்துள்ள பா, பாவினங்கள்*

*திவ்வியப் பிரபந்தத்தில் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், ஆசிரியத்துறை, ஆசிரியப்பா, கலி விருத்தம், கலித்தாழிசை, கலிநிலைத்துறை, வெண்டளைக் கலித்தாழிசை, சந்தக் கலி விருத்தம், கட்டளைக் கலித்துறை, வஞ்சி விருத்தம் என்ற பாவினங்கள் அனைத்து இசைக்குரிய வகைமையில் அடக்கியுள்ளனர். ஆயின் இந்த பாவினங்கள் அனைத்தும் வடிவ அடிப்படையில் வாய்பாடு நோக்கி அமைந்துள்ளது. எனவே வாய்பாடே இசைக்கான ஒன்றாக உள்ளது. சந்தக் கலி விருத்தம் வடிவம் மற்றும் சந்தம் நோக்கி வந்துள்ளது. கட்டளைக் கலித்துறை வடிவம், எழுத்து எண்ணிக்கை, தளை அடிப்படை என மூன்றன் அடிப்படையில் அமைந்துள்ளது.*

*குறள் வெண்செந்துறை, வெண்டுறை தளை மற்றும் வடிவம், பொருண்மை நோக்கி அமைந்த பாவினங்கள்.*

*எட்டடி நாற்சீர் ஒரு விகற்ப கொச்சகக் கலிப்பா, தரவு கொச்சகக் கலிப்பா என்ற கலிப்பா வகை வடிவம், வாய்பாடு நோக்கியே திவ்வியப் பிரபந்தில் பயின்று வந்துள்ளன.*

*நேரிசை வெண்பா வடிவம் மற்றும் தளை, குறிப்பிட்ட இலக்கண அடிப்படையில் பயின்று வந்துள்ளது.*

*கலி வெண்பா பாடலின் பொருண்மை நோக்கி பயின்று வந்துள்ளது. மடல் இலக்கிய வகை என்ற அக பொருண்மை அடிப்படையில் கலி வெண்பா திவ்வியப் பிரபந்தத்தில் பயின்று வந்துள்ளது.*

*ஆயின் வடிவம், பொருண்மை இரண்டனை அடிப்படையாக கொண்டு வந்துள்ள பா, பாவினங்களில் வகையுளி முக்கிய உறுப்பாக உள்ளது. இதனை அக உறுப்பு எனலாம்.*

*திவ்வியப் பிரபந்த யாப்பில் வகையுளி*

*இந்த வகையான சொற்களை அறுத்தல் என்ற ஒரு கட்டுப்பாடு கிடையாது. பெயர், வினை, இடை, உரி, வினையடை, பெயரடை என எந்த வகையான சொற்களையும் அறுத்து வரும் பா, பாவினங்களுக்கு ஏற்ப வகையுளி திவ்வியப் பிரபந்தத்தில் பயின்று வந்துள்ளது. வடிவம், பொருண்மை என்ற இரண்டனை அடிப்படையாக கொண்டு திவ்வியப் பிரபந்த யாப்பானது பயின்று வந்துள்ளது. பாவினம் அனைத்தும் வடிவ அடிப்படையில் உள்ளது. பா பொருண்மை மற்றும் வடிவ அடிப்படையில் பயின்று வந்துள்ளது. இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது சொற்களை பொருளற்ற சூழலில் அறுத்தலே வகையுளியாக பின்னர் பெயர் பெற்றது. பொருளற்றச் சூழலில் சொற்களை அறுக்கும்போது ஓசை இனிமை அமையாது. ஆயின் வாய்பாடே இசைக்கான கூறாக உள்ளதால் பாவினங்கள் அனைத்தும் இசைப்பா என்று அழைக்கப்படுகிறது.*

*வகையுளி முன் + வகையுளி பின்*

*சொற்களை முன்னும் பின்னும் அறுத்து சேர்த்து ஓசையினை நிறைவு செய்துள்ளனர்.*

*கட்டளைக் கலித்துறை*
*பார்த்தனுக் கன்றரு ளிப்பார தத்தொரு தேர்முன்னின்று*
*காத்தவன் றன்னைவிண் ணோர்\கரு மாணிக்க மாமலையை*
*தீர்த்தனைப் பூம்பொழில் சூழ்திரு மாலிருஞ் சோலைநின்ற*
*மூர்த்தியைக் கைதொழ வும்முடி யுங்கொலென் மொய்குழற்கே*[3]

*இச்செய்யுள் நேரசையில் தொடங்கி ஓர் அடியில் 16 எழுத்துக்களை கொண்டு கட்டளைக் கலித்துறைக்குரிய இலக்கண அடிப்படையில் அமைந்துள்ளது. வெண்பாவிற்குரிய ஓசையில் அமைந்துள்ளது. ஐந்தாம் சீர்கள் விளங்காய் மற்றும் தேமாதண்பூ வாய்பாட்டில் அமைந்து இலக்கண அடிப்படையில் உள்ளன. உத்தம, மத்திம, அதம என்ற மோனைகள் கட்டளைக் கலித்துறை அமையும். இச்செய்யுளில் சொன்மோனை அமைந்து பாடப்பட்டுள்ளது. காத்தவன் என்பதற்கு இணையாகக் கரு என்னும் நிற அடைத்தொடர் சொன்மோனையாக அமைந்துள்ளது. சொன்மோனை அமையும் பொருட்டு கரு என்னும் நிற அடைத் தொடர் அமைந்துள்ளது. கார், கரிய, காள என்பது கருமை என்னும் நிறத்தை குறிக்கும் அடைத் தொடர்கள். ஆயினும் கரு என்னும் அடைத் தொடர் அமைய காரணம் வெண்பாவின் ஓசையினை நிறைவு செய்யும் பொருட்டே. கட்டளைக் கலித்துறையில் வெண்பாவிற்குரிய ஓசையினை மட்டுமே கொண்டு பாட வேண்டும் என்பது விதி. எனவே சொன்மோனை மற்றும் வெண்பாவினை ஓசையினை நிறைவு செய்யும் பொருட்டு கரு என்னும் அடைத் தொடர் வகையுளியாக அமைந்துள்ளன. றன்னை விண்ணோர் கருமாணிக்க வகையுளி இன்றி இவ்வாறு அமையுமானால் வெண்பாவிற்குரிய ஓசையின்றி கட்டளைக் கலித்துறைக்குரிய இலக்கணம் இல்லாமல் அமையும். எனவே றன்னைவிண் ணோர்\கரு மாணிக்க என சொற்களை அறுத்து முன்னும் பின்னும் சேர்த்து வெண்பாவிற்குரிய ஓசையினை நிறைவு செய்துள்ளனர்.*

*வகையுளி பின்*

*நறு என்னும் சுவை அடை தனக்கு முன்பாக பிற சொல்லைப் பிணையாகவும் ந\று வகையுளியாகவும் அமைந்துள்ளது.*

*சந்தக் கலிவிருத்தம்*
*மாலையுற்றக டல்கிடந்தவன் வண்டுகிண்டுந றுந்துழாய்*
*மாலையுற்றவ ரைப்பெருந்திரு மார்வனைமலர்க் கண்ணனை*
*மாலையுற்றெழுந் தாடிப்பாடித்தி ரிந்தரங்கனெம் மானுக்கே*
*மாலையுற்றிடும் தொண்டர்வாழ்வுக்கு மாலையுற்றதென்*

நெஞ்சமே[4]

இச்செய்யுள் 'தானதனன தனதன தனதனன தனனா, தானதனன தனதனன தானதனன தனன, தானதனன தானதானன தனதனன தானனா, தானதனன தனதானன தானதனன தனன' என்ற சந்த அடிப்படையில் அமைந்துள்ளது. மூன்றாம் மற்றும் நான்காம் சீர்கள் சந்தம் நான்கு, மூன்று என்ற அடிப்படையில் உள்ளன. வண்டுகிண்டுநறுந் துழாய் என்றால் தனதனதனன தனா என சந்த அமைப்பு முறையானது மாறிவிடும். எனவே வண்டுகிண்டுந றுந்துழாய் என வகையுளியாள மாற்றி மூன்று மற்றும் நான்காம் சீரின் சந்த ஓசை ஒழுங்கு முறையில் அமைந்துள்ளனர்.

வகையுளி முன்

இகரச் சுட்டு தனக்கு முன்பாக பிற அசையினை முன் வகையுளியாக கொண்டுள்ளது.

கலி விருத்தம்

அருள்கொண் டாடு மடியவ ரின்புற
அருளி னானவ் வருமறை யின்பொருள்
அருள்கொண் டாயிர மின்தமிழ் பாடினான்
அருள்கண் டீரிவ் வுலகினில் மிக்கதே[5]

இச்செய்யுளின் அனைத்து சீர்களும் ஈரசை வாய்பாட்டில் அமைந்துள்ளன. 'கலி விருத்தம் நேரசையில் தொடங்கினால் பதினொரு எழுத்துக்களும், நிரையசையில் தொடங்கினால் பன்னிரண்டு எழுத்துக்களும் கொண்டு அமையும்'[6] என வீரபத்திர முதலியார் இலக்கணம் வகுத்துள்ளார். இவ்விலக்கணத்தை ஒத்தே நிரையில் தொடங்கி ஒவ்வொரு அடியிலும் பன்னிரண்டு எழுத்துக்கள் உள்ளன. எல்லா அடியிலும் முதல் இரண்டு சீர்கள் மாச்சீராக அமைந்துள்ளது. ஆயின் மூன்றாம் அடியில் இரண்டாம் சீர் மட்டும் விளச் சீராக வந்துள்ளது. மூன்று மற்றும் நான்காம் சீர்கள் விளச் சீராக வந்துள்ளன. இரண்டாம் சீர்கள் மூன்றாம் அடியினை தவிர பிற அனைத்தும் மாச்சீராக வந்துள்ளன. எனவே மாச்சீராக அமையும் பொருட்டு டீ\ரிவ் முன் வகையுளி கொண்டு இகரச் சுட்டு அமைந்து மாச்சீர் வாய்பாட்டினை நிறைவு செய்துள்ளது.

முடிவுரை

தொல்காப்பியர் வகையளிக்கு இலக்கணம் கூறியுள்ளார். ஆயின் இசை என்ற சொல் ஓசை குறித்த பொருண்மையில் உரையாசிரியர் மூவரும் உரை வகுத்துள்ளனர். இசை, ஓசை என்ற இரண்டு சொல்லும் ஒரே பொருள் குறித்த சொல்லாக தொல்காப்பியம் பயன்படுத்தியுள்ளார். திவ்வியப் பிரபந்தத்தில் பா, பாவினங்களில் வகையுளி அக உறுப்பாக அமைந்துள்ளது. குறிப்பிட்ட வரன்முறையில் செய்யுளைப் புனையும்போது அவற்றின் அமைப்பு முறைகள் சீராக அமையும் சற்று மாறுபட்டும் அமையும். அவ்வாறு சற்று மாறுபட்டு சொற்கள் அமையும்போது அதனை வகையுளியாக மாற்றி இசைக்குரிய சந்த, வாய்பாட்டு ஓசையினை நிறைவு செய்துள்ளனர். குறிப்பாக நேரிசை வெண்பாவில் தளை பிறழாமல் இருக்க வகையுளி முக்கிய செய்யுள் உறுப்பாக பயின்று வந்துள்ளது. இசைப்பாவில் அதன் சந்தம் மற்றும் வாய்பாடு என்ற இரண்டனை சீரான சமத்தளத்தில் எடுத்து செல்ல வகையுளி முக்கியமான உறுப்பாக திவ்வியப் பிரபந்தத்தில் பயின்று வந்துள்ளது. சொற்கள் பொருளற்ற சூழலில் அறுத்து சேர்த்தலும் விருத்தப்பாக்குரிய வாய்பாட்டில் அமைய வகையுளி தேவையான ஓர் உறுப்பாக உள்ளது.

அடிக்குறிப்பு

1. தொல்காப்பியம்பொருளதிகாரம் ,, நூற்பா: 319.
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியர் உரை.
3. திவ்வியப் பிரபந்தம், பாடல்: 1835.
4. மேலது, பாடல்: 665.
5. மேலது, பாடல்: 944.
6. விருத்தப்பாவியல், பக்கம்.21.

துணைநூற் பட்டியல்

இளம்பூரணனார் (உ.ஆ)., - தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை – 600 014.

*13ஆம் பதிப்பு – 2014.*

*தாமோதரம் பிள்ளை, சி.வை., - கட்டளைக் கலித்துறை,*
*பாரதி புத்தகாலயம்,*
*7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை,*
*சென்னை – 600 018.*
*முதல் பதிப்பு: மே – 2014.*

*திருஞானசம்பந்தம், ச., (உ.ஆ) - யாப்பருங்கலக்காரிகை,*
*கதிர் பதிப்பகம்,*
*திருவையாறு – 613 204.*
*முதல் பதிப்பு: சூன் – 2007.*

*பேராசிரியர் (உ.ஆ) - தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல்-*
*உவமவியல், செய்யுளியல்-மரபியல்,*
*சாரதா பதிப்பகம்,*
*சென்னை – 600 014.*
*முதல் பதிப்பு – 2018.*

*வீரபத்திர முதலியார், தி., - விருத்தப்பாவியல்,*
*ஈ.என். தணிகாசல முதலியார் பதிப்பாசிரியர்,*
*கழகம், சென்னை.*
*முதற் பதிப்பு – 1984.*

*லிப்கோ பதிப்பு - நாலாயிர திவ்வியப் பிரபந்தம்,*
*லிப்கோ பப்ளிஷர் (பி) லின்,*
*புதிய எண்.36, வடக்கு சாலை,*
*மேற்கு சி.ஐ.டி.நகர்,*
*சென்னை – 600 035.*
*மறு அச்சு – 2016.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********